**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிகிழமை**
**I.A.NO. 2/2025 in O.S. No.69/2020**

C. கணேசன் ..... மனுதார்/ மனுதார்/ வாதி

/எதிர்/

1. N.தெய்வேந்திரன்(இறப்பு) ...... எதிர்மனுதார்/பிரதிவாதி
2. D.சாந்தி
3. D. சரவணன்
4. D. நாகதேவி
5. D.முத்துலெட்சுமி ....2முதல்5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டியவர்கள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 11.09.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதார்/ மனுதார்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.ஒயிட் கென்னடி, திரு.முத்து ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.V.முரளிசங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

அசல்வழக்கில் பிரதிவாதியான தெய்வேந்தின் அவர் காலஞ்சென்ற காரணத்தினால், மேற்படி 2 முதல் 5 பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்ப்பட்ட 1208 கால தாமதத்தை மன்னித்து மனுவை அனுமதிக்க வேண்டி காலவரையறைச் சட்டம் பிரிவு 5 –ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதார்/ மனுதார்/ வாதி தரப்பு மனுவுரை சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கில் எதிர்மனுதார் / பிரதிவாதிக்கு எதிராக Declaration மற்றும் Recovery of possession பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது கடந்த 19.03.2024 அன்று பிரதிவாதி வாரிசுகளை சேர்க்க வேண்டி வாய்தா ஏற்பட்டு இருந்தது. மேலும், அசல் வழக்கு பிரதிவாதி கடந்த 28.07.2021 அன்று இறந்து விட்டார். பிரதிவாதி இறந்ததை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கடந்த 02.12.2021 வாய்தாவின் போது மெமோ தாக்கல் செய்தபின் தான் மனுதாரருக்கு தெரியவந்தது. மனுதாரர் தரப்பில் கடந்த 17.10.2023 மெமோ தாக்கல் செய்யப்பட்டது. மேலும் கடந்த 01.04.2024 அன்று தான் மனுதாரர்க்கு பிரதிவாதியின் வாரிசு விபரம் தெரியவந்தது, மேற்படி பிரதிவாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகள் 1)சாந்தி, 2)சரவணன், 3)நாகதேவி, 4) முத்துசெல்வி ஆகியோர்களை இந்த வழக்கில் புதிய பிரதிவாதிகளாக சேர்க்க

வேண்டிய impleading Petition–ஐ 90 நாட்களுக்குள் மனுதாரர் தாக்கல் செய்திருக்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்ய இயலாமல் போன 1208 நாட்கள் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து அசல் வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3)எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினராகியுள்ளார்.

4)இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). <u>தீர்வு</u>

i) மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக Declaration and Recovery of possession பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம்பிரதிவாதி கடந்த 28.07.2021 அன்று இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதிக்கு சாந்தி, சரவணன், நாகதேவி, முத்துசெல்வி ஆகியோர்கள் வாரிசுகளாக சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்வதற்கு காலதாமதமாகிவிட்டதாகவும், மேற்படி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1208 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்று கோரி இம்மனு தாக்கல் செய்துள்ள நிலையில், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் பின்னிட்டு பல்வேறு வழக்குகள் ஏற்பட்டு நீதிமன்றத்தின் பொன்னான காலம்

விரயமாகிவிடும் என்பதாலும் இம்மனுதாரரின் மனுவை அனுமதிப்பதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ii) முடிவில், மனுதாரர் கோரியபடி, கடந்த 28.07.2021ம் தேதி இறந்து போன 1ம் பிரதிவாதியைப் பொறுத்து, 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1208 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.07 15:44:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.